**Subscription.**
Inland: Rs. 50/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89|
Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 11 AUGUST 1989 No. 32
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
' The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA, VADDUKODDAI.

### J. D. C. S. I. CHILDREN'S RALLY.

The Annual Children's Rally of the J. D. C- S. I. was held on 22nd July 1989 at the newly extended Cathedral Church of Vaddukoddai. Inspite of unpredictable conditions a large gathering of children, Sunday School Teachers and Pastors assembled at Vaddukoddai. 21 Churches amounting to 1200 in numbers were present.

The Programme started a 9.00 a. m. with the Worship Service conducted by the Vaddukoddai Sunday School. Then the Children went on a procession singing praise songs around Jaffna College. The singing competition took place at 11.00 o'clock in the Ottley Hall. On the 20th, Individual Singing Competition was held at Uduvil. Nearly 51 competitors took part. The following won prizes.

**under 9:**

| | | |
|---|---|---|
| 1. Narmada | - Tellippalai | - 1st Place |
| 2. Daniel Niruban | - Tellippalai | - 2nd ,, |
| 3. Sinthuja Amirthanathan | - Vaddukoddai | - 3rd ,, |
| 4. Suventhiraraj | - Vaddukoddai | - 4th ,, |
| 5. Raveen | - Chavakachoheri | } - 5 th ,, |
| 6. Sutha Rajakanthan | - Tellippalai | |

**under 12:**

| | | |
|---|---|---|
| 1. S. Krishanthy | - Tellippalai | - 1 st Place |
| 2. Sathialogini Sathiamoorthy | - Araly | } - 2nd ,, |
| 3. Lioni | - Erlalai North | |
| 4. K. Dharshini | - Uduvil | - 3rd ,, |
| 5. Dilani Jeyakumaran | - Vaddukoddai | - 4th ,, |
| 6. Banureka | Pandatheruppu | } - 5th ,, |
| 7. Jeyanthi | - Pandatheruppu | |

**under 15:**

| | | |
|---|---|---|
| 1. Nijitha Amirthanathan | - Vaddukoddai | - 1st Place |
| 2. Thanuja Amirthanathan | - Vaddukoddai | } - 2nd ,, |
| 3. Niruba | - Chavakachcheri | |
| 4. Joy | - Nunavil | } - 3rd ,, |
| 5. Premela Chellappah | - Araly | |
| 6. Doris Dharshini Rajendra | - Vaddukoddai | |
| 7. Kosalai | - Uduvil | } - 4th ,, |
| 8. Luxani Kulatungam | - Vaddukoddai | |
| 9. Nirojan | - Nunavil | } - 5th ,, |
| 10. Christina | - Araly | |

**under 18:**

| | | |
|---|---|---|
| 1. Michael Samuel | - Tellippalai | - 1st Place |
| 2. Grace Jebarajah | - Tellippalai | - 2nd ,, |
| 3. Srivathani Sriranganathan | - Pandatheruppu | - 3rd ,, |

In the Bible Memory Competition 73 children fully memorised the portion given to them. Each was given a cash prize of Rs. 25/-.

In the Churches Singing Competition the following obtained places.

**GROUP 1:**

| | |
|---|---|
| Uduvil and Vaddukoddai | - 1st Place |
| Tellippalai and Manipay | - 2nd ,, |
| Pandatheruppu and Chavakacheheri | - 3rd ,, |
| Nunavil, Navaly and Atchuvely | - 4th ,, |

**GROUP 2:**

| | |
|---|---|
| Araly and Sandilipay | - 1st Place |
| Karainagar and Erlalai North | - 2nd ,, |
| Alaveddy and Erlalai South | - 3rd ,, |
| Kudathanai and Uduppiddy | - 4th ,, |

At 2 o'clock a variety entertainment programme was given by the Vaddukoddai Sunday School. This was followed by distribution of prizes and certificates by the Rt. Rev. D. J. Ambalavanar.

The programme ended with the prayer and benediction pronounced by the Bishop.

## OBITUARY.

A familiar landmark at Chundikuli has been removed from our midst in the death of Mr. M. S. Thambithurai, Retired Teacher, St. John's College, Jaffna. Mr. Thambithurai was 86 years old when he died on the 1st of August. After a life long career as a Teacher at St. John's College, he spent his retired years also in chundikkuli. He was one of the pillars of St. John's Church and was for many years a licenced Reader and Server at that Church. He leaves behind his sons Gunaseelan, Retired Principal of St. John's College, Gnanendran (Canada) and daughters Gnanasothy Thivyanesan (U. K.), Susila Manoharan U K. and their spouses. Mr. Thambithurai's eldest son Paramapathy died in 1987 as a result of the military operations.

The funeral service took place in his home at Old Park Road on Thursday the 3rd of August at 3-00 p. m. The Vicar of St. John's Church the Rev. J. Sarvanandan conducted the service and preached the sermon. He was assisted by the Rev. Isaac Selvaratnam. Bishop Ambalavanar offered the closing prayers and gave the benediction. At the grave side the Rev. Sarvanandan led the service and Bishop Ambalavanar performed the committal rites.

We regret to report the death of Mrs. Elizebeth Sinnathamby, widow of the late S. N. Sinnathamby, a worker in the Jaffna Diocese of the C. S. I. Mrs. Sinnathamby who was living with her daughter Atputham Arasaratnam and her husband at their home at Chavakacheheri died on the 31st of July at the age of 85. The funeral service at the home was held on Tuesday the 1st of August at 10-00 a. m. The Rev. V. Rajkumar, Pastor of the Chavakachcheri Church conducted the service and preached the sermon. Mr. S. V. Vythilingam paid a tribute to the life and work of Mrs. Sinnathamby. The Rev. K. P. Govindaraj and the Rev. C. J. Arasaratnam -a grandson of the deceased also took part in the service. Mrs. Sinnathamby leaves behind a son, the Rev. S. Thevanesan now in the U.S.A. and daughter Mrs. Atputham Arasaratnam and their spouses to bemoan her death. Her husband Mr. S. N. Sinnathamby died in 1981.

## WANTED.

1. For the CHRISTIAN INSTITUTE FOR THE STUDY OF RELIGION AND SOCIETY (CISRS), CHRISTA SEVA ASHRAM, CHUNNAKAM:-
   A Clerk cum Library Assistant.
   Minimum qualifications: First Examination in Library Science, knowledge of English typing and experience in office routine and accounts.
2. For the CHRISTIAN THEOLOGICAL SEMINARY (CTS), CHUNNAKAM:-
   A Clerk with Tamil typing, office routine and accounts. Preference to those with English typing as well.

*Apply stating qualifications and experience with two recent testimonials before August 31st to:*

1. For CISRS:
   Acting Director, CISRS.
   Christa Seva Ashram,
   Chunnakam.
2. For CTS:
   Registrar,
   Christian Theological
   Seminary, Chunnakam.

**A. Kadirgamar,**
Acting Director, CISRS,
Registrar, CTS.

## HARTLEY'S TER—JUBILEE. A PUPIL GRATEFULLY REMEMBERS.

**HARLTEY COLLEGE** completed in 1988 one hundred and fifty year of service to the youth of Vadamaradchy. The Ter-Jubilee could not be celebrated in a fitting manner in Point Pedro itself as the buil dings are still not in good con dition. The Hartleyites in the United kingdom had a celebration in October last year. The Past Pupils Association in Colombo had a dinner on June 11th and recalled with pride the achievements of their alma mater. The Ter - Jubilee is also an occasion to remember with gratitude the stalwarts of an earlier generation, who set Hartley on her path to great-n ss.

My recollections naturally begin with my Principal, Mr. C. P. Thamotheram. He had become Head of the Wesleyan Mission Central School, Point Pedro at the early age of thirty. Four years later, the School was given Secondary School status and renamed Hartley College. One condition of the

( Continued on Page 4 )

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவமோ எந்தக் குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 11 - 08 - 1989 இதழ் 32


## சிந்தனை 25.

4 - 8 - 89 இதழின் தொடர்ச்சி.

இறைவன் தனது மக்களைத் தனிமைப்படுத்தித் தனது வரலாற்றுப் பணிக்கென்று அவர்களை ஆயத்தம் செய்கின்றார். ஆயத்த நிலையில் பிரித்து எடுக்கப்பட்டோர், பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர். இறைவரலாற்றின் பணிக்களத்தில் துன்பம் என்பது பலமான ஆயுதம். இந்த ஆயுதம் கூர்மையுள்ளதாக இருக்குமேயானால், மீட்பின் பணி, செயலாற்றல் உள்ளதாகவே இருக்கும்.

தனிமைப்படுத்தப்பட்ட யோனா துன்பத்தை அனுபவித்தான். பற்றுறுதியாளன் - பக்தியாளன் - இறை அறிவாளன் எனப்பட்ட யோனா துன்பத்திலிருந்து மீட்பு அடையவேண்டும் என்று துடிக்கின்றான். யோனாவுடைய உயிருள்ள துடிப்பையும்' துடிப்பிற்கு உயிரூட்டம் தரும் இறை அறிவையும் யோ 2: 8, 9ம் வசனங்கள் வலியுறுத்துகின்றன. இறைத்திட்டத்தை எதிர்த்து நிற்பவர்களும் துன்பத்தை அனுபவித்தார்கள் - அனுபவிக்கின்றார்கள். இறைத்திட்டத்தை ஏற்றவர்களும் துன்பத்தை அனுபவித்தார்கள் - அனுபவிக்கின்றார்கள். மொத்தத்தில் எல்லோருமே துன்பத்தை அனுபவிக்கின்றார்கள் என்று கூறுபவர் உண்டு.

இறைவரலாற்றுத் திட்டத்தின் செயற்கள வீரர்களாகப் புறப்பட்டோர் துன்பப்படாமல் இல்லை - துன்பப்பட்டார்கள். இவர்களுடைய துன்பத்தில் புலம்பலின் குரல் கேட்கவில்லை என்பது அல்ல. அங்கும் புலம்பலின் ஒலி ஒலித்தது. இறைத்திட்டத்திற்குத் தம்மைச் செயற்களமாக்கிக் கொண்டவர்கள் துன்பப்பட்டார்கள். பிறருடைய மீட்பின் வரலாறு ஒளிமயமாகுவதற்காக -பிறர் சிரித்து வாழவேண்டும் என்பதற்காகப் புலம்பி அழுதார்கள். எனவே, இறைத்திட்டத்திற்குப் பணிந்து அடங்குபவர்கள் சந்திக்கும் துன்பவாழ்வு, காலம் செல்லச் செல்லப் பேரின்ப வாழ்வாக அமையும்.

இறைவனை எதிர்த்து நிற்பவர்கள் துன்பத்தைச் சந்திக்கும் போது, வேதனையின் புலம்பலும் மரணத்தின் அந்தகாரமும் அவர்களைச் சூழ்ந்திருக்கும். இத்துன்பம் சுடர்விட்டு எரியும் தீவட்டியாக அமையப் போவதில்லை.

புதியேற்பாட்டின் திருச்சபை வரலாற்றில், துன்பப்பட்ட - துன்பப்படுத்தப்பட்ட பரிசுத்தவானின் வரலாற்றை அப்போ. 7ம் ஆம் அதிகாரத்தில் படிக்கின்றோம். அடியான் ஒருவனின் துன்ப வரலாறு எரியும் தீவட்டியாக மாற்றப்பட்டது என்பதை வலியுறுத்துகின்றது இது.

இறைத்திட்டத்தை எதிர்த்த பவுலடிகளாரும் தமஸ்குவின் பாதையில் துன்ப வரலாற்றைச் சந்தித்தார் - (அப்போ. 9ம் அதிகாரம்) விருத்த சேதனம், நியாயப் பிரமாணம் இவற்றின் பங்காளிகள் யூதர்கள் மட்டுமே என்ற பிடிவாதப் போக்குடைய யூதக் கோட்பாட்டாளன், பார்வை அற்று இருளுக்குள் அகப்பட்டு வேதனைப் பட்டான். இந்த வேதனையில் இறைவனும் இறைமக்களும் பங்கு கொண்டு அவனின் இருளகற்றிச் சுடர்விட்டு எரியும் தீவட்டியாக அவனை ஆக்கி, அன்னிய மக்களென்று அவனாலே கூறப்பட்ட மக்களின் இருளகற்றும் சுடராக அவனை மாற்றியது இறைத்திட்டம் என்றே கூறுதல் வேண்டும். இறைவனுடைய அழைப்பை எதிர்த்து நின்றவன் யோனா. யோனாவோ பற்றுறுதியாளன் - பக்திமான் - இறை அறிவாளன் என்று கண்ட இறைவன், பிறரன்பு இவனிடம் இல்லாது கண்டு அவனுக்கு அவ்வறிவை ஊட்டவே அவனில் செயற்பட்டார்.

பிறரின் மீட்பில் கரிசனை இல்லாத யோனா, மீன்வயிற்றில் அகப்பட்டு இருளிற் சிக்கித் தவித்துத் தனது மீட்பு இறைவனுடையது என்ற வலுவான சிந்தனையை உள்ளெடுத்தான்

யோனாவில் இறைவன் செயற்பட்டது யோனாவைப் பழிவாங்குவதற்காகவல்ல; தன்னுடைய செயற்திட்டத்திற்குப் பங்காளியாக்கிக் கொள்ளுவதற்காகவே. நம்முடைய மீட்பரும் மேய்ப்பருமாகிய கிறிஸ்து, பிதாவாகிய இறைவனின் செயற்களமாக இருந்தும் கூட வேதனைப்பட்டார். இவ்வேதனைகள் எல்லாம் அகில உலக மீட்புப் பணிக்கான வேதனைகளே.

இறைத்திட்டம் நம் ஒவ்வொவரிடமும் தரப்படுகின்றது. இத்திட்டங்கள் எல்லாம் சூழ்நிலை சார்ந்து - சமயம் சார்ந்து தரப்படும். இதைத் தவிர்ப்பதற்காக யோனாவைப் போல் ஒடுவதும், சமூகத்திற்கு மறைந்து செல்வதென்பது முடியாத காரியம். யோனாவைப் போலப் புலம்பிக் கொண்டு இருப்பவர்களாக அல்ல, இறைத்திட்டம் எது என்று அறியும் ஆர்வமுடையவர்களாக நாம் ஆகவேண்டும் - அனைத்து மக்களையும் இறைமக்களையும் கண்டு அன்பின் செய்தியை அவர்களோடு பகிர்ந்து கொள்வோராகவேண்டும்- இருக்கும் மக்களை மீட்டெடுக்கும் ஆக்கப் பணியில் நாம் ஈடுபட வேண்டும். இதுதான் இறைத்திட்டம். இத்திட்டத்தில் பங்காளிகள் ஆவதே நமக்குத் தரப்படும் சிறப்பு. எப்பொழுதும் மேலானவற்றையே நாடித்தேடுவோம்.

துறையூரான்.

வண. ஆ. வே. யேசுதாசன்

## இலங்கையில் எவ்விதம்

4 - 8 - 89 இதழின் தொடர்ச்சி.

இன்று நற்செய்தி மனிதன் பூரணத்துவமடைய வேண்டுமென்ற குறிக்கோளை வைத்துப் போதிக்கப்படுவதில்லை. கிறிஸ்து உலகத்தில் அவதாரமெடுத்ததின் முழு நோக்கம், தேகத்தில் மனிதன் எப்படி வாழ வேண்டுமென்பதை வாழ்ந்து காட்டவே. தேகத்தில் பூரணத்துவம் அடையாத எந்த மனிதனும் நித்திய ஜீவனில் பிரவேசிக்கப்போவதில்லை. இது எமது நற்செய்தியில் வலியுறுத்தப்படல் வேண்டும். ஏனைய மதங்கள் தேகத்தைக் கோளகமாக வைத்தே மனிதரை ஆன்மீகத்தில் சிறக்கச் செய்கின்றன. ஆனால் கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் தேகத்தை மேடையாக வைத்துப் போதிப்பவர் மிகச் சிலரே. ஏனெனில் கிறிஸ்தவ கொள்கையின் படி சரீரமும் ஆன்மாவும் பிரிக்கப்படத்தக்கதொன்றல்ல. இது உண்மைதான். ஆனால் சிலர், இந்த உண்மையை விளங்காமல் எந்தச் சரீரம் என்று கேட்கின்றனர். மனித உடலை, தூய உடல், ஆன்மீக உடல் என இருவகையாகப் பிரிக்கின்றனர். இது சரியா என்பதைக் கிறிஸ்தவ கண்ணுடன் நோக்க வேண்டும். அப்பொழுது உண்மை புலனாகும். அல்லாவிடின் நற்செய்தி எதுவித பயனையும் அளிக்கப்போவதில்லை. தேகத்தின் குணங்களையும், தேகத்தின் நிகழ்ச்சிகளையும் நாம் கருத்திற் கொள்ளாவிட்டால் எமது நற்செய்தி பயனற்றதாய்விடும். எப்போ தூல தேகத்தில் இயங்கும் ஆன்மாவும் இறையும் வேறல்ல வென்பதை உணருகின்றோமோ அப்போதுதான் கிறீஸ்தவர்கள் சிறக்க வழியுண்டு. இந்தப் போதனையையே வெளிப்படுத்தின நற்செய்தி போதிக்கின்றது. "எனது நுகம் இலேசானது" என கிறீஸ்து திருவுளம் பற்றினார். நாம் கொண்ட கொள்கைகளை விட்டு மனத்தைச் சுத்திகரிக்கும் முறைகளைக் கிறீஸ்தவ போதனைகளின் அடிப்படையில் முன்வைப்போமேயானால் நிச்சயமாக எமது நற்செய்தி கவரக்கூடியது மட்டுமல்லாது வெற்றிகொள்ளவும் இடமுண்டு.

எந்த மார்க்கத்திலும் தியானம் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. தியானத்தைப்பற்றிச் சுவாமி விவேகானந்தர் கூறும் பொழுது, ஒருவன் தியானம் செய்யப்பழகிக் கொண்டால் ஏனைய சமயக் கிரியைகள் அரிவரி வகுப்புக்குச் சமமென விவரிக்கின்றார். கிறீஸ்தவர்கள் மத்தியில் தியானத்துக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் கொடுபடுவதில்லை. ஏனெனில் ஆன்மா, இறையை விட வேறல்ல என்ற ஒருமைத்துவம் போதிக்கப்படுவதில்லை. இந்த ஒருமைத்துவத்தை உணர்ந்த மார்க்கங்களே தியானத்துக்கு முதலிடம் அளிக்கின்றன. எமது கிறீஸ்தவ நற்செய்தி வலுப்பெற வேண்டுமானால் ஆவியின் ஒருமைத்துவத்தை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல் இலகுவான தியானமுறைகளையும் மக்கள் மத்தியிற் பரப்ப முன்வர வேண்டும். நற்செய்தி ஓங்குவதற்கு இம்முறை பலனளிக்கும்.

எமது நற்செய்தி பொலிவு பெறுவதற்கு இன்னுமொரு நியாயம், எமது ஆன்மீக அனுபவங்களைச் சாக்கிரகத்தில் வைத்துத் தான் ஆராய்கின்றோம். இது ஒரு பகுதி உண்மையையே விளக்கும். மனிதனுக்கு இன்னும் இரண்டு அவஸ்தைகளாகிய சொப்பனம், சுழித்தி இருப்பதை மறந்து விடுகின்றோம். சாக்கிரகத்தில் நாம் அனுபவிப்பவை நடைமுறை உண்மையின் ஒரு பாகமே. எனவே மூன்று அவஸ்தைகளையும் தொகுத்து ஆராயப்படுபவைகளே முழு உண்மையை எடுத்துக்காட்டும் என்றே நம்புகிறேன். இந்த வகையில் நற்செய்தி பரப்பப்படும் பொழுது கிறீஸ்தவ தத்துவங்களை மக்கள் கூடுதலாகப் புரிந்து கொள்வார்கள்.

நற்செய்தி பரவுவதற்குத் தடையாகவிருக்கும் இன்னுமொரு காரணம், ஆரம்ப நடைமுறை உண்மைகளை (basic facts of Christanity) நாம் இன்றும் போதித்து வருகின்றோம் இதைக் "கெறிக்மா" (Kerygma) வென்று கிரேக்க மொழியில் வர்ணிக்கப்படுகின்றது. நற்செய்திக்குச் சிறப்பளிப்பது கிறீஸ்தவ போதனைகளின் பின்னணியிலிருக்கும் தத்துவ தரிசனங்களே. இதை "டிடாக்கிக்' (Didache) என்று கிரேக்க மொழியில் வியாக்கியானம் செய்யப்படுகின்றது. ஏனைய மதங்களின் போதனைகள் அவரவரது தத்துவ அடிப்படையிலிருப்பதனால், கிறிஸ்தவர்களாகிய நாமும் எமது தத்துவங்களைப் போதிப்பதே பொருத்தமாகும். இதன்மூலம் மக்கள் மனம் கவரப்படுவது மட்டுமல்லாது நற்செய்தியும் மறுமலர்ச்சி பெறுகின்றது.

சீஷர்களுடைய காலத்தில் நற்செய்தி, கேள்வி - மறுமொழி பாணியில் பரப்பப்பட்டுவந்தது. ஏன், கிறீஸ்துவின் காலத்திலும் கூட நற்செய்தியின் விளக்கம் கேள்வி - மறுமொழி அடிப்படையிற் கொடுக்கப்பட்டது "கேட்டு விளங்குங்கள்" என்ற பதங்களையே கிறீஸ்து திரும்பவும் திரும்பவும் தமது போதனைகளின்மத்தியில் பிரயோகிக்கின்றார். இதனுடைய அர்த்தமென்னவெனில் நாம் நித்திய ஜீவனை அடைவதற்கு, கடவுள் ஞானத்தை உணர வேண்டும் என்பதே. ஆகவே, எமது நற்செய்திப்பணியில் ஞானம் தொனிப்பது மிக அவசியமே. (தொடரும்)

## செய்திகள்.

### பிரட்மன் வீரக்கோன்.

சர்வதேச விடயங்கள் குறித்து ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸாவுக்கு ஆலோசனை வழங்க, திரு. பிரட்மன் வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். நிர்வாகத்துறையின் சிக்கலான விடயங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்துவதில் திரு. வீரக்கோனுக்கு உள்ள ஆற்றல்களைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். முன்னாள் சிவில் சேவை அதிகாரியான இவர், முன்னாள் பிரதமரின் செயலாளராகவும் ஏழு வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார். சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகப் பிற நாட்டு அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் சகல அலுவல்கள் குறித்து நடவடிக்கைகள் எடுப்பதும் இவரது கடமையாகும்.

### தீப்பிடித்து எரிந்த நதி.

சோவியத்தில்,உக்கேரன் நோரன் என்ற பெரிய ஆறு ஒடுகிறது. மலாய் மொஷ்கி கிராமத்தில் நிலத்திற்குக் கீழே உள்ள பெற்றோல் குழாய்களில், (16- 7- 89) ஏற்பட்ட விரிசல் காரணமாக, நோரன் ஆற்றில் பெற்றோல் கலந்துவிட்டது. இப்பெற்றோல் விரிசலை உடனடியாக நிறுத்தி விட்டார்கள். இதை அறியாத கிராமத்து விவசாயி ஒருவன் தான் குடித்த சிகரெட்டுத் துண்டொன்றை (அணையாத துண்டு) தற்செயலாக ஆற்றில் எறிந்து விட்டான். உடனே அது தீப்பற்றிக்கொண்டது தீப்பிழம்புகள் பல மைல்களுக்குப் பரவியதால், விவசாயி, அதிற்கருகி இறந்தான்.

### நவீன அமெரிக்க விமானம்.

ராடர் சாதனங்களுக்கு அகப்படாத நவீனரக பொம்பர் விமானம் ஒன்றை அமெரிக்கா 17ம் திகதி திங்கட்கிழமை (17-07-89) கலிபோனியாவில் பரீட்சித்துப் பார்த்து வெற்றி கண்டுள்ளது. ஐம்பது கோடி டாலர் செலவில் உருவாக்கப்பட்ட இவ்விமானம் B - 2 என்று அழைக்கப்படும்.

## Women of Asia Leaders of Social Change.

I would like to compare Asian women to the Sun, the provider and the protector of the people. Women like the Sun create and recreate the world. Women are cocreators with God. Yet women are excluded from the affairs of the world.

The creation of wealth and the economic process of today has excluded the women and so the world is in a mess. In order to find an alternative to the exclusive and collapsing economic system women need to perceive an economic theory in which People become the supreme consideration. The existing economic system should be changed before it destroys our Planet.

Social change can come not only through a new economics but also through the religions and cultures of Asia. Asian religions began with compassionate Gods. Asian religions have the potentials to include women if we care to go to the roots of these religions. In practice women are excluded from religions. Religions are used to fight the economic battles of men; war and weapons belong to men. We have so many modern Gods, bloodthirsty Gods for sake so much innocent blood is being shed: Nationalism, Capitalism, Marxism, Racism, Sexism, Science and Technology, and Consumerism. Even traditional religions of Asia like Christianity, Islam, Buddhism and Hinduism serve these alien Gods. Men have become incapable of seeking Christ, the Compassionate God. Only women can see the compassionate light in the eyes of Christ. We need to rediscover the God of Asia who suffers with the suffering people.

Politics, the play of power as we see today has an inherent flaw and the more we persue it the more miserable we become. If women of Asia are reaching towards a more human and egalitarian world we need to abdicate power and keep out of conflict. So long as power operates there will be domination and alienation. We, women need to perceive the crucifixion from a new angle and redefine our life and create transparent relationships. The way of Asian women is peace and harmony and not conflict.

Mother Earth is crying in deep anguish because of the innocent blood spilt over centuries, because of nuclear weapons, because of industrial waste, because of the destruction of forests, because of the extinction of thousands of plants creatures and people. Mother Earth is crying. Only women can feel her agony and embrace her and her people. We need to compassionate knowing of the Gods to save the world and re-establish a new world of the Rainbow where life becomes abundant for all. I shall end my words with one of my poems on 'Women'. This is a conversation between a mountain and a woman.

'Devi, I come to your feet
beaten, betrayed, broken in pieces;
cover me with your misty blanket,
from me again'.
'Woman, eat fire and be a radiant Sun,
Conquer the cosmos; you are shakti,
the eternal fire
churning the universe.'
'Devi, I see huts, people crushed,
Your people clinging to the margin.
I see birds flying towards the Sun
and her domain'.
'Woman, eat fire and be a radiant Sun:
bring back the kingdom for my people.
Take my shield, power, patience
and the fire dormant.
Go, recapture the world.'

(Hartley continued)

up-grading was that the School find all the necessary funds and not appeal to the Church for help. Mr. Thamotheram set about his task methodically. He recruited a number of graduates to the staff, and also ensured a steady income. He always had in his coat pocket a red-covered note book, which had the names of all the pupils, class by class, and the fees due from each. He saw to it that the pupils paid their dues promptly. One remarkable thing about him was that he knew every pupil by name and initials and by parentage.

He went round the College at least four times a day: first immediately after beginning of school, in the morning and in the afternoon. The second round was unpredictable - may be in the third or 4th period of each session. A fifth round was sometimes done. This kept the teachers on their toes.

He had the wisdom of appointing teachers of the top class to teach English, Mathematics and Science in the First Form or Standard Six. This ensured that the concepts were rightly understood by the pupils and the foundations properly laid.

To Mr. Thamotheram must go the credit for establishing Hartley as a good Secondary School, with the results at the Cambridge Senior and London Matriculation Examinations as good as those of any other School in the Island. Football was popular, and Hartley became the Jaffna Inter-School Champions in 1923, with K. C Praesoody as Captain. I remember we had a holiday.

By Mr. K. Pooranampillai.

(to be continued)

## CARE OF THE SICK AND THE INJURED IN THE MEDICAL WORLD OF TODAY — A PRACTITIONER'S VIEW POINT.

It is yet another one of those dreary sultry nights. The cardiac monitor continues to bleep mechanically - the young man once a strong athlete able to perform herculean tasks, but now a pathetic shadow of his glorious past is lying there helplessly, oblivious of his surroundings. The only reminder of his superhuman strength was the firm jaw line in that wasted face which as it rose and fell with each breath reminded you of an ancient Gothic warrior. Every facility that modern medicine could offer was bestowed on him, and yet here he is in a fully equipped hospital fighting for a few gasps of air that may prolong his life for yet another minute or two.

On the far side of the ward the young doctor on duty is monitoring a patient who has just been revived from the jaws of death. He has been on his feet since morning and his feet resemble lead as he shuffles to and fro checking the post operative patient. The extreme work load and the thought that half his work load was still to be done at this late hour, drives him to the depths of despair.

Suddenly a cry is heard piercing the night and the wife of the dying man comes running to the doctor and tells him that her husband is gasping for breath. The tired doctor mutters to himself "of all the time in the world he had to arrest now. What can I do to a man with extensive secondaries all over anyway?" He hesitates a moment but then woefully pulls himself to his feet and rushes to the dying man's side. After checking everything, he sits by the side of the patient and gently strokes his hand. As the doctor talks to him and helps to ease the pain, in that quiet hour of the morning, the man slowly relaxes and a look of calmness crosses his agonised face. In this pleasant state of tranquility he swiftly and silently passes into the next world.

After everything has settled down the young doctor sits down to contemplate - was it more rewarding to work really hard running from casualty to the theatre with an accident victim, or spend a few minutes with a man who needed a helping hand to ease him through those last agonising moments of life? All that came to his mind after the whole day was over, was the radiant glow and complete calm in the dying man's eyes as he sat there stroking his hand and talking to him.

This incident which has happened or can happen in any one of our lives brings to my mind a famous saying of Seneca "If therefore a physician does nothing more than feel my pulse and put me on the list of those whom he visits on his rounds, instructing me what to do and what to avoid without any personal feeling, I owe him nothing more than his fee because he does not see me as a friend but as a client".

The doctor patient relationship which has been studied by many from many different angles can be identified as the most important aspect of a patient's hospital stay. Accurate diagnosis and correct choice of therapeutic measures are necessary conditions but they are not the only ones. Good treatment also depends on a satisfactory relationship between the patient and his doctor "the first of all remedies" as Ballint describes it.

A medical event is a meeting between two persons and if it is to be successful it is essential that the doctor's chief purpose should be to show concern and give technical help, and the patient's is to get well. A genuine mutual link between the intentions of the doctor and the patient constitutes the basis of the medical event and upon this are constructed the four main factors expressing it and giving it reality.

Firstly the doctor spends time with the patient creating a sense of closeness with him that helps bring out that bit of vital information which is needed to clinch the diagnosis. Today the history of the patient has been swamped by a whole gamut of investigations which in the end deliver a diagnosis sans the emotions of the patient.

Secondly based on the diagnosis the doctor acts by doing something. This may be in the form of advising, counselling, prescribing or if necessary performing surgery. Throughout this exercise the doctor should maintain his closeness with the patient never once leaving him as a mere client.

Thirdly there is the affective aspect which was understood as "philia" (friendship) by the ancient greeks or as transference, a term coined by the great psychoanalyst Sigmund Freud. This forms the basis of the doctor patient relationship in which the patient realises that the doctor is his friend thus abiding by whatever conditions put forward by the doctor realising that its not material gain but the ultimate well being of himself that the doctor is interested in striving hard to achieve.

Finally the ethico religious aspect which means many different things to many different People. Plato once lamented "For this is the error of our day. That physicians separate the body from the soul." The state of positive health implies the well being of the total person in the community.

by *Dr. Priashanta Visvalingam*,

(to be continued)

**தாரகை ஒளி:-**

முயல்வோன் நினைவுகள் தனத்திற் கேது;
பதறிச் செய்பவன் தரித்திரன் ஆவான்.

— நீதிமொழிகள். 21 : 04

# எங்கள் கருத்து

## துன்பத்தின் வலிமை.

துன்பம் இல்லாத வாழ்வு எவருக்கும் இல்லை. இன்பமும் துன்பமும் வாழ்வில் மாறி மாறி வருவது இயல்பு. கடவுள் ஏன் துன்பத்தை வர விடுகிறார்? நமது தமிழ் மக்கள் திரும்பத் திரும்பத் துன்பத்தை-அழிவை அனுபவிக்கிறார்களே, ஏன்? இதைத் தடுக்கக் கடவுளால் முடியாதா? என்று கேள்விக் கணைகளை அடுக்கிக் கொண்டே போகிறோம்.

கடவுளின் உள்ளத்தை உணர்ந்து – அவர் செய்யும் செயல்களுக்கான காரணங்களை அறிந்து, அறிவிக்கக் கூடிய விடை கிடையாது என்பதை நாம் உணர வேண்டும். எனினும், அவரில் அமர்ந்திருந்து நாம் வாழும்போது, அவருடைய வழி வகைகளை ஓரளவாகினும் நாம் அறிந்து தெளிவு பெற முடியும்.

துன்பத்தின் அனுபவம் இவ்வுலகிற்குரியது என்பதை நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். ஸேர். ஹென்றி டிமெல் என்பவர், குருநாகல் ஆதீனத்தின் முன்னாள் பேராயர் லக்தாச டி மெல் என்பவரின் தந்தையாவார். தன்னால் வளர்த் தெடுக்கப்பட்ட வாலிபன் ஒருவனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைக் கேள்விப்பட்ட இவரின் மகன் (பேராயர் லக்தாச டி மெல்) தனக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்குக்கூறியது – ''இத்தகைய வன் செயல்கள் நடைபெறும் உலகம் தானே இது'' என்பதாகும். ஆம், இவ்வையகம் இருக்கும் நிலைமை ஏற்பதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

கடவுள், நம் வாழ்க்கையிற் செயலாற்றுகிறார் என்பதை நமது அனுபவத்தில் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, இடுக்கண் வரும்போது, அதன் மூலம் கிடைக்கும் பயனைப்பற்றி நினைக்க வேண்டும். கடவுள் இஸ்ரவேல் மக்களுடன் பட்சமாகப் பேசுவதற்காக, வனாந்தரத்திற்கு அழைத்துச் சென்றதாக ஓசியா தீர்க்கன் கருதுகிறார். (ஓசே. 2:14) கட்டடம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கற்கள், கல் உளியால் அதற்கேற்றவாறு செதுக்கப்படும். கடவுளின் உளியின் செயல்களை நாம் அனுபவிக்கும் போது, நாமும் பயன்படுத்தப்படுகிறோம் என்பதை அறிகிறோம். நம் வாழ்க்கையும் கடவுளாற் செதுக்கப்படாவிட்டால், பயன்படாது.

நமக்கு வரும் துன்பத்தின் மூலம், நம் வாழ்க்கையிலே கடவுள் ஆற்றும் செயலை நாம் ஒவ்வொரு வரும் ஒருவாறு உணருகிறோம். எனினும், எல்லோருக்கும் பொதுவான அனுபவ உண்மையையும் நாம் அறிய வேண்டும். அதாவது, ''மரணமோ, ஜீவனோ, தேவதூதரோ, துரைத்தனங்களோ, நிகழ்காரியங்களோ வருங்காரியங்களோ, வல்லமைகளோ, உயர்வோ தாழ்வோ, வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள கடவுளின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது என்று நிச்சயித் திருக்கிறேன்'' (ரோ. 8: 38, 39) என்பது புனிதர் பவுல் அடியாரின் பட்டனுபவம். இதனை நாம் அனுபவத்தால் கூறமுடியுமா?

எல்லாவிதத்தீமைகளின் நடுவிலும், கடவுளின் அன்பு போதுமானது. எல்லாத் தேவைகளையும் அது பூர்த்தி செய்யக் கூடியது. பவுல் கூறுகிறார், தனக்கு நேரிட்ட துன்பங்களின் நடுவிலும், இறைவனை நோக்கி வேண்டுதல் செய்த போது, ''என் கிருபை உனக்குப் போதும்'' என்று இயேசு பெருமான் கூறினார் என்று.

கிறிஸ்துவுடன் நாமும் துன்புறவேண்டும் என்ற அழைப்பைப் பெறுகிறோம். அவருடைய அன்பை ஏற்காதவர்களையும் அவர் நேசித்த காரணத்தால், கிறிஸ்து அவர்களுக்காகத் துன்புற்றார். அவருடைய அடியாராகிய நாம், அறியவேண்டிய அனுபவம் இது. இதை, இன்றைய சூழ்நிலையில் சிந்தித்துப் பார்ப்பது நமது கடமையல்லவா?

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறுகிறவர்களுக்கு மட்டுமே அவருடைய உயிர்த்தெழுதல் வல்லமையின் அனுபவம் கிட்டும். மக்களை நேசிக்கும் அன்பின் அனுபவமே சிலுவையின் அனுபவம். இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள சாட்சிகளாய் விளங்குகிறவர்களுக்குத் தங்கள் சாட்சியைப் பூரணப்படுத்துவதற்காகவே துன்பம் அருட் கொடையாக அருளப்படுகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது.

## செய்திகள்.

### 29, 50. 000 மக்கள்.

ஆபிரிக்காக் கண்டத்தை உள்ளிட்ட நாடுகளில் 1957ம் ஆண்டு முதல் 1988ம் ஆண்டு வரையிலான 31 வருடகாலங்களில் 23 யுத்தங்கள் நடந்து முடிந்துள்ளன நடந்து முடிந்த யுத்தங்களினால் 29, 50 000 மக்கள் பலியானதுடன் 14, 63, 000 இராணுவ வீரர்களும் உயிரிழந்துள்ளனர். அங்கோலா, புரூண்டி, சமரோன், சாட், எத்தியோப்பியா, கானா, மொசாம்பிக் ,நைஜீரியா,ருவண்டா சூடான், உகண்டா, மேற்கு சகாரா, சயர், ஸாம்பியா, அல்ஜீரியா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலேயே இந்த 23 யுத்தங்களும் இடம்பெற்றுள்ளன.

### ஜப்பானியப் பிரதமர்.

ஜப்பான் பிரதம மந்திரி திரு. சசுக்கியூனோ அவர்களது லிபரல் ஜனநாயகக் கட்சி, மேல் சபைத் தேர்தலில் தோல்வியடைந்ததால் திரு, சுசுக்கியூனோ தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததிலிருந்து நல்ல செல்வாக்குடன் செயற்பட்ட லிபரல் கட்சி இம்முறைதான் தோல்வியடைந்துள்ளது.

### ஈரான் ஜனாதிபதி.

ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாராளுமன்றச் சபாநாயகர் அலி அக்பர் ஹஸ்மி ரப்ஸன் ஜானி அவர்கள் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அமோகப் பெரும் பான்மையுடன் இவர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1935ம் ஆண்டு பிறந்து, 1979 ஆண்டு சுப்ரீம் கவுன்சில் உறுப்பினரான இவர், 1980ம் ஆண்டு முதல் இன்று வரை பாராளுமன்றச் சபாநாயகராகவும் இருக்கிறார்.

### 50 கோடி நஷ்டம்.

1983ம் ஆண்டு முதல் 1987ம் வரையிலான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கால் இலங்கை அரசிற்கு ஏற்பட்ட நஷ்டம் 50 கோடி ரூபாவுக்கு அதிகமானது என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரட்ண தெரிவித்துள்ளார் இந்த நான்கு ஆண்டுகளில்' பாதுகாப்புச் செலவைவிடப் பல்வேறு வகைகளிலும் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது· என்று பாராளுமன்ற விவாதத்தின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

### நல்லூர் - புனிதர் யாக்கோபு திருக்கோயிலின் 161 ஆம் ஆண்டு நிறைவு விழா.

*(1828 — 1987)*

நல்லூரில் உள்ள புனிதர் யாக்கோபு திருக்கோயிலின் 161 ஆம் ஆண்டு நிறைவு விழா, கடந்த மாதம் 22 — 25ஆம் திகதி வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இச் சபையின் குருவானவர் அருள் திரு. ஐசக் செல்வரத்னம் அவர்களின் தலைமையில், இவ்விழாவின் நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெற்றன.

இதனையொட்டி நடைபெற்ற உயிர்மீட்சிக் கூட்டங்கள், கிறிஸ்தவ இறையியற் கல்லூரிப் பேராசிரியர் அருள் திரு. டி· ஆர் அம்பலவாணர் அவர்களால் நடத்தப்பட்டன. கனம் அம்பலவாணர் போதகர் அவர்கள், கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்துவால் அழைக்கப்பட்டவர்கள்- கிறிஸ்துவால் அணைக்கப்பட்டவர்கள் - கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர்கள் என்ற பிரிவுகளில் தமது அருளுரைகளையாற்றினார். ஜூலை 28ஆம் திகதி ஞாயிறு காலை 7- 00 மணிக்கு நடைபெற்ற நற்கருணைத் திருவழி பாட்டில் கனம் அம்பலவாணர் போதகர் ''துன்பத்தில் இன்பம்'' என்ற பொருளில் அருளுரை வழங்கினார்.

இவ்விழாவில் நடைபெற்ற அடுத்த சிறப்பு நிகழ்ச்சி - ''குருத்துவ ஊழியத்தில் பெண்கள் பங்கு'' என்ற பொருளில் நடைபெற்ற கருத்தரங்காகும். இதில், சுண்டிக்குளி துணை அதிபர் திருமதி நவீனா தேவானந்தன், திருமதி சூரி உவில்லியம்ஸ் ஆகியோர் முறையே அக்கருத்துக்குச் (தலையங்கம்) சார்பாகவும் எதிராகவும் தமது வாதங்களை நிகழ்த்தினர்· இன்னும் பலர் (பெண்களும், ஆண்களும்) இத் தலைப்பை ஆதரித்தும் எதிர்த்தும் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். வண. ஜே. சர்வானந்தன், வண. டாக்டர் ஹென்றி விக்டர் ஆகியோரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். இக் கருத்தரங்கிற்கு அருள் திரு. ஐசக் செல்வரத்னம் தலைமை வகித்தார்.

வாலிபர் சிறப்புக் கூட்டத்தில் திரு. சூரி உவில்லியம்ஸ் அவர்களும், பெண்கள் சிறப்புக் கூட்டத்தில் அருட் சகோதரி திருமதி அரசரத்தினம் (அல்வாய் மெதடிஸ்த சபை ஊழியர்) அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

புனிதர் யாக்கோபின் திருநாள் இவ்விழாவின் இறுதி நாளாகிய ஜூலை 25 ஆம் நாள் மாலை 4- 30 மணிக்கு நற்கருணை வழிபாட்டோடு கொண்டாடப்பட்டது. மேற்படி உயிர் மீட்சிக் கூட்டங்களில், புனிதர் யோவான் கல்லூரி ஆசிரியர் திரு. பொன்னண்டோ அவர்களால் நான்கு வேதப்படிப்புகள் நடாத்தப்பட்டன.

கனம் செல்வரத்னம் போதகர் அவர்கள், இவ்விழாக் கூட்டங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய வேண்டும். என்ற முழு நோக்கத்துடன், தன் சபை மூப்பரோடு இடைவிடாது செபித்துச் செய்த ஆயத்தங்களை, தூய ஆவியானவர் அங்கீகரித்தார் - அனைவர்க்கும் ஆசிர்வாதமாய் விளங்கி நின்றார். சுண்டிக்குளி, கோப்பாய், உரும்பிராய், கொக்குவில் ஆகிய சபைகளிலிருந்து அனேகர் வந்து இவ்விழாவிற் பங்குகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அச்சுவேலித் திருச்சபையிற் சமயக் கருத்தரங்கு.

கடந்த மாதம் 9 ஆம் திகதி, அச்சுவேலித் தெ. இ. தி. சபையில், காலை 9- 00 தொடங்கி நண்பகல் 12- 30 மணி வரை சமயக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. சபை ஊழியன் சகோதரன் ஜே. ஞானப்பிரகாசம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கிற்கு அவரே தலைமை தாங்கினார். சுன்னாகத்தில் உள்ள கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மாணவர்களாலும், பேராசிரியர் அருள்திரு டி. ஜே. அம்பலவாணர் அவர்களாலும்- இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. இறையியல் மாணவர்கள் பக்திப் பாடல்களைப் பாடியதோடு அங்கு சமூகமளித்த வாலிபப் பிள்ளைகளுக்குப் புத்துயிர்ப் பாடல்களையும பழக்கினர். கனம் அம்பலவாணர் போதகர் அவர்கள், ''இன்றைய சூழ்நிலையிற் திருச்சபையின் பங்கு என்ற பொருளில் இரண்டு சொற்பொழிவுகளை ஆற்றினார். பல கேள்விகள் கேட்கப்பட்டன- உரிய விடையளிக்கப்பட்டது.

சபை ஊழியனும், செயற்குழு அங்கத்தினரும், குறிப்பாக வாலிபரும் இச்சிறப்புக் கூட்டங்களுக்காக அயராது உழைத்தனர் -இடைவிடாமல் செபித்து வந்தனர். அதனால் சமூகமளித்த அனைவரும் இக்கருத்தரங்கினால் பயனடைந்தனர். இச் சபையின் ஊழியன் இலங்கை - கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் பழைய மாணவன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### நன்றி செலுத்தும் ஆராதனை.

பண்டத்தரிப்பில் வசிக்கும் திரு. செல்லத்துரை அவர்களின் மனைவியாரும், அருள்திரு. எஸ். ஜெயநேசன் அவர்களின் தாயாரும், பண்டத்தரிப்புச் சபையின் உறுப்பினருமாகிய காலஞ்சென்ற திருமதி கிறேஸ் நேசம்மா செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து, அவர் வாழ்ந்த நல்வாழ்வுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை, கடந்த மாதம் 19 ஆம் திகதி பிற்பகல் 3- 30 மணிக்கு பண்டத்தரிப்புத் தேவாலயத்தில், சபைக்குரு அருள் திரு. எஸ். பி. ஜெயசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வாராதனையில் வட்டுக் கோட்டைச் சபைப் போதகர் அருள்திரு அ. ஜெயகுமாரன் அருளுரை வழங்கினார். கிறிஸ்தவ இறையியற் கல்லூரிப் பேராசிரியர் அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர் இறுதிச் செபங்களைச் செய்தார். செல்வி ஷாமினி சின்னையா, செல்வி சுஜிதா மூர்த்தி ஆகியோர் வேதப் பாடங்களை வாசித்தனர். இவ்வம்மாளின் குடும்பத்தினர், சிறப்புப் பாடல் பாடினர்.

தலைவர் கனம் ஜெயசிங்கம் போதகர் அவர்களின் ஆசீர்வாதத்துடன், ஆராதனை இனிது முடிவுற்றது. ஆராதனையின் பின், சமூகமளித்த அனைவரும் தேநீர் விருந்திற் கலந்து கொண்டனர்.

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89.

Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 11,AUGUST 1989. and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna.